| | |
|---|---|
| TNVR13000669 2025 | சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை<br>முன்னிலை–திரு.ஆர்.சதீஷ், எம்.எல்.,<br>சார்பு நீதிபதி, அருப்புக்கோட்டை<br>2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 30 ம் நாள் திங்கட்கிழமை<br>**அ.வ.எண்.292/2025** |

1. செ.தேவி
2. செ. செல்வகணேஷ்
3. செ. செல்வக்குமார்
4. செ. உமாமகேஸ்வரி ... வாதிகள்

/எதிர்/

1. மீனாட்சி
2. ஆண்டிச்சி
3. முத்துச்செல்வி
4. வருவாய் வட்டாட்சியர்,
   காரியாபட்டி
5. சார்பதிவாளர், காரியாபட்டி
6. தமிழ்நாடு அரசுக்காக அதன் விருதுநகர்
   மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு 24.03.2026 ம் தேதி அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதிகள்தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஆர்.திருமுருகன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜராகாத நிலையில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையிலும், 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்கை வலியுறுத்தவில்லை என வாதிகள் தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு, 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்கு தள்ளுபடியாகியுள்ள நிலையிலும் மேலும், வாதி தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

<u>தீர்ப்புரை</u>

தாவாச் சொத்து வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்று

விளம்புகை செய்யக் கோரியும், அதன் தொடர்ச்சியாக தாவா சொத்தை வாதிகள் அமைதியாக அனுபவம் செய்து வருவதற்கு 1 முதல் 3 பிரதிவாதிகளோ அவர்வகை ஆட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று 1 முதல் 3 பிரதிவாதிகள்மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக் கோரியும், 1ம் பிரதிவாதியால் தனது மக்களான 2, 3 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தைப் பொறுத்து எழுதி கொடுக்கப்பட்டள்ள 06.08.2013 தேதியிட்ட காரியாபட்டி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.3731/2013 தான செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதில்லை என விளம்புகை செய்யக்கோரியும்,  மற்றும் வழக்கின் செலவுத்தொகை கோரியும் வாதியால்  வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2.வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்:–</u>**

தாவா சொத்து லேட்.அழகுமூப்பர் மனைவி முத்துப்பேச்சி என்பவருக்கு பாத்தியப்பட்டு 434 நிர் பட்டாவில் தாக்கலாகி அவரது அனுபவத்தில் இருந்து வந்த சொத்தாகும். தாவா சொத்தை அனுபவம் செய்து வந்த முத்துப்பேச்சி தாவா சொத்து உள்ளிட்ட வேறு சில சொத்துக்களையும் தனது மகனான செல்லப்பன் பெயருக்கு 06.01.1986ம் தேதியிட்ட உயில் எழுதி வைத்து விட்டு கடந்த 09.01.1986ம் தேதி இறந்துவிட்டார். அவரது கணவரான அழகுமூப்பர் அதற்கு முன்பே 1982ம் ஆண்டில் இறந்துவிட்டார். ஷை முத்துப்பேச்சி மறைவிற்குப்பின் உயில் ஊர்ஜிதத்திற்கு வந்து தாவா சொத்தை 1ம் வாதியின் கணவரும் 2 முதல் 4 வாதிகளின் தந்தையுமான செல்லப்பன் அடைந்து அனுபவம் செய்து வந்தார். மேற்படி செல்லப்பன் கடந்த 29.06.2004ம் தேதி இறந்துவிட்டார். இறந்துபோன செல்லப்பனுக்கு மனைவியான 1ம் வாதியும் மக்களான 2 முதல் 4 வாதிகளும் மட்டுமே வாரிசுகளாக இருந்து வருகின்றனர். செல்லப்பன் மறைவிற்குப்பின் வாதிகளே தாவா சொத்தை வாரிசு முறையில் அடைந்து வரி வகையறாக்கள் செலுத்தி அனுபவம் செய்து வருகின்றனர். தாவா சொத்தில் வாதிகளைத்தவிர வேறு

எவருக்கும் யாதொரு பாத்தியமோ அனுபவமோ எக்காலத்திலும் இல்லை.

1ம் வாதியின் கணவரும் 2 முதல் 4 வாதிகளின் தந்தையுமான செல்லப்பன் உடன்பிறந்த சகோதரிதான் 1ம் பிரதிவாதி ஆவார். 2,3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் மக்களாவார்கள். 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் யாதொரு பாத்தியமும் இல்லை. இந்நிலையில் தாவா சொத்து தங்களுக்கு பாத்தியப்பட்டது என பிரஸ்தாபம் செய்து கொண்டு கடந்த 01.07.2014ம் தேதி வாதிகளின் அனுபவத்திற்கு இடையூறு செய்ய முயன்றதில் வாதிகள் மிகுந்த பிரயாசையின்பேரில் தடுத்து நிறுத்திவிட்டனர். இதனால் சந்தேகம் கொண்ட வாதிகள் தாவா சொத்தைப் பொறுத்து ரெவின்யூ ஆவணங்களை சரிபார்த்ததில் 1ம் பிரதிவாதி தனது மக்களான 2,3 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் பிரிவினையில்லாத 1/3 பாகத்தை பொறுத்து கடந்த 06.08.2013ம் தேதியிட்ட காரியாபட்டி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 3731/2013 நிர் தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் என்ற விபரத்தை அறிந்து அதிர்ச்சி அடைந்தனர். மேலும் முத்துப்பேச்சி பெயரில் இருந்து வந்த 434 நிர் பட்டாவை ரத்து செய்து ஷை மோசடியான இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் 2,3 பிரதிவாதிகள் பெயரில் 3030 நிர் பட்டா 21.01.2014ம் தேதி மாறுதல் செய்யப்பட்டுள்ள விபரமும் 07.07.2014ம் தேதி வாதிகளுக்கு தெரிய வந்தது. இதனை ஆட்சேபித்து வாதிகள் 4ம் பிரதிவாதி அலுவலகத்தில் 07.07.2014ம் தேதி மனு செய்ததில் உரிய விசாரணைக்குப்பின் 2,3 பிரதிவாதிகள் பெயரில் மாற்றப்பட்ட 3030 நிர் பட்டா ரத்து செய்யப்பட்டு மீண்டும் ஆதி சுவான்தாரரான முத்துப்பேச்சி பெயருக்கு 434 நிர் பட்டாவுக்கு 29.09.2014ம் தேதி மாற்றப்பட்டு அதன்பின் ஷை உயிலின் அடிப்படையில் லேட்.செல்லப்பன் மனைவியான 1ம் வாதியின் பெயருக்கு 672 நிர் பட்டாவாக 18.11.2014ம் தேதி மாறுதல் செய்யப்பட்டு இன்றுவரை 1ம் வாதி பெயரில் வரி செலுத்தி வாதிகளால் அனுபவம் செய்யப்பட்டு வருகிறது.

தாவா சொத்துக்கு 1ம் வாதி பெயரில் பட்டா வழங்கப்பட்ட போதிலும் 1ம் பிரதிவாதி 2,3 பிரதிவாதிகளுக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட இனாம் சாசனம் சட்டப்படி ரத்து செய்யப்படாததை தங்களுக்கு சாதகமாக எடுத்துக்கொண்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தாவா சொத்தில் வாதிகளின் அமைதியான அனுபவத்திற்கு கடந்த 10.07.2025ம் தேதி இடையூறு செய்ய முயன்றதில் வாதிகள் மிகுந்த பிரயாசையின் பேரில் தடுத்து நிறுத்திவிட்டனர். இருப்பினும் தாவா சொத்தை எப்படியும் கைப்பற்றியே தீருவோம் என 1 முதல் 3 பிரதிவாதிகள் பிரஸ்தாபம் செய்து வருகின்றனர். 1 முதல் 3 பிரதிவாதிகள் ஆள் பலமும் பண பலமும் மிக்கவர்கள் ஆவார்கள். அவர்களின் சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகளை நீதிமன்றம் மூலமே தடுத்து நிறுத்த முடியும் என்பதாலும் 1ம் பிரதிவாதியால் தனது மக்களான 2,3 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் பிரிவினையில்லாத 1/3 பாகத்தை பொறுத்து எழுதி கொடுக்கப்பட்ட 06.08.2013ம் தேதியிட்ட காரியாபட்டி சார்பதிவாளர் அலுவலக 3731/2013 எண் கொண்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய நீதிமன்றத்திற்கு மட்டுமே அதிகாரம் உள்ளது என்பதாலும் இவ்வழக்கு வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எதிராக யாதொரு பரிகாரமும் கோரப்படவில்லை. இருப்பினும் 2, 3 பிரதிவாதிகளால் 5ம் பிரதிவாதி அலுவலகத்தில் வேறு உரிமை மாற்று ஆவணங்கள் பதிவு செய்ய வாய்ப்புகள் இருப்பதாலும், 4ம் பிரதிவாதியின் அலுவலகத்தில் பட்டா மாறுதல் கோர வாய்ப்புகள் இருப்பதாலும் 4, 5 பிரதிவாதிகளின் உயர் அதிகாரியாக 6ம் பிரதிவாதி இருந்து வருவதாலும் 4 முதல் 6 பிரதிவாதிகள் அவசியமான கட்சிக்காரர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

**3.** இவ்வழக்கில் வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்யக்கூடிய வகையில், இவ்வழக்கில் 3ம் வாதி செல்வக்குமார் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள்

குறியீடு செய்யப்பட்டுள்ளன 1 முதல் 3 பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜராகாத நிலையில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையிலும், 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்கை வலியுறுத்தவில்லை என வாதிகள் தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு, 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்கு தள்ளுபடியாகியுள்ள நிலையிலும் பிரதிவாதிகள் தரப்பில் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் எதுவும் முன்னிறுத்தப்படவில்லை.

**4. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவெனில்,**

வாதிகள் கோரியுள்ள விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் ஆவணம் இல்லா நிலையது என விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா என்பதேயாகும்.

**5.** வாதிகள் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வாதிகள் தரப்பு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வாதிகள்தரப்பில், தாவா சொத்து லேட்.அழகுமுப்பர் மனைவி முத்துப்பேச்சி என்பவருக்கு பாத்தியப்பட்டு 434 நிர் பட்டாவில் தாக்கலாகி அவரது அனுபவத்தில் இருந்து வந்ததாகவும், அவர் தாவா சொத்தைப் பொறுத்து தனது மகனான செல்லப்பன் என்பவருக்கு உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளதாகவும், மேற்படி முத்துப்பேச்சி மறைவிற்கு பின் உயில் ஊர்ஜிதத்திற்கு வந்து தாவா சொத்தை 1ம் வாதியின் கணவரும் 2 முதல் 5 வாதிகளின் தகப்பனாரான செல்லப்பன் அடைந்து அனுபவம் செய்து வந்ததாகவும், அவர் இறந்தபின்பு வாதிகள் தாவா சொத்தை அடைந்து வரி வகையறா செலுத்தி அனுபவம் செய்து வருவதாகவும், மேற்படி செல்லப்பனின் சகோதரிதான் 1ம் பிரதிவாதி எனவும், தாவா சொத்தில் யாதொரு பாத்தியமும் அனுபவமும் இல்லாத 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் தனக்கு பிரிவினையில்லாத 1/3 பங்கு இருப்பதாக கூறி தனது மக்களான 2,3

பிரதிவாதிகளுக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளதாகவும், மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் 2,3 பிரதிவாதிகள் தங்கள் பெயருக்கு பட்டா மாற்றம் செய்துள்ளதை மாற்றம் செய்யக்கோரி வாதிகள் 4ம் பிரதிவாதி அலுவலகத்தில் பட்டா மாறுதல் செய்ய மனு தாக்கல் செய்து பட்டா பெற்றுள்ளதை ரத்து செய்து மீண்டும் முத்துப்பேச்சி பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டு அதன்பின் உயிலின் அடிப்படையில் லேட்.செல்லப்பன் மனைவியான 1ம் வாதி பெயருக்கு பட்டா மாறுதல் செய்யப்பட்டு வாதிகளால் அனுபவம் செய்பயப்பட்டு வருவதாகவும், 1 முதல் 3 பிரதிவாதிகளால் ஏற்படுத்தப்பட்ட இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்யப்படாத நிலையில் மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தில் வாதிகளின் அனுபவத்திற்கு பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்து வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

**6.** வாதிகள் தரப்பில் வாதி 3ம் வாதி செல்வக்குமார் வா.சா.1 ஆக சாட்சியமளித்து, பிராதில் உள்ள சங்கதிகளை குறிப்பிட்டு எடுத்துச்சொல்லி பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கையில், தாவா சொத்துக்கு முத்துப்பேச்சி பெயரில் 434 என்ற எண்ணில் பட்டா ஏற்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கையில் தாவா சொத்தைப் பொறுத்து 06.01.1986 அன்று முத்துப்பேச்சி அவரது மகனான செல்லப்பன் என்பவருக்கு உயில் சாசனம் எழுதி வைத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.3 ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கையில், முத்துப்பேச்சியின் இறப்பு சான்றிதழாக காணப்படுகிறது. வா.சா.ஆ.4 ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கையில் தாவா சொத்துக்குரிய 434 பட்டாவுக்கு முத்துப்பேச்சி பெயரில் வரி செலுத்தப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.5

ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கையில், தாவா சொத்துக்கு 1ம் வாதி பெயரில் 672 என்ற எண்ணில் பட்டா ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.7 ஆவணங்கள் 1ம் வாதியின் கணவர் மற்றும் 2 முதல் 4 வாதிகளின் தகப்பனாரான செல்லப்பனின் இறப்பு சான்றிதழாக காணப்படுகிறது. வா.சா.ஆ.8 ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கையில், 06.08.2013 அன்று 1ம் பிரதிவாதி 2, 3 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தைப் பொறுத்து இனாம் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.9 ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கையில், தாவா சொத்துக்கு 2,3 பிரதிவாதிகள் பெயருக்கு 21.01.2014 அன்று பட்டா மாறுதல் உத்தரவு பெறப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.10 ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கையில், தாவா சொத்துக்கு மீண்டும் முத்துப்பேச்சி பெயரில் பட்டா மாறுதல் உத்தரவு ஏற்பட்டுள்ளது என்பதையும் அதன் தொடர்ச்சியாக 18.11.2014 அன்று 1ம வாதி பெயருக்கு பட்டா மாறுதல் உத்தரவு பெறப்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது. வா.சா.ஆ.12 ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கையில், தாவா சொத்திற்குரிய அரசு வழிகாட்டி மதிப்பாக காணப்படுகிறது.

**7.** வாதிகள்தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்படி வா.சா.ஆ.1, வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.10 ஆவணங்களின் அடிப்படையில் பார்க்கும் போது, தாவா சொத்திற்கு லேட்.அழகுமூப்பர் மனைவியான முத்துப்பேச்சி என்பவருக்கு பாத்தியப்பட்டு அவர் பெயரில் பட்டா ஏற்பட்டு வரி செலுத்தி அனுபவித்து வந்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.2, வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.11 ஆவணங்களின் அடிப்படையில் பார்க்கும்போது, மேற்படி முத்துப்பேச்சி தாவா சொத்தை தனது மகனான செல்லப்பனுக்கு உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்பதும், மேற்படி செல்லப்பன் இறந்தபின்பு மேற்படி உயிலின் அடிப்படையில் 1ம் வாதி பெயருக்கு பட்டா ஏற்பட்டு, வரி செலுத்தி அனுபவித்து வருகிறார் என்பதை அறிய முடிகிறது.

8. வாதிகள்தரப்பில், மேற்படி செல்லப்பனின் சகோதரியான 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் எவ்வித பாத்தியமோ அனுபவமோ இல்லாத நிலையில், தாவா சொத்தில் தனக்கு 1/3 பங்கு பாகம் இருப்பதாக கூறி தாவா சொத்தில் பிரிவினையில்லாத 1/3 பங்கு பாகத்தை பொறுத்து 2,3 பிரதிவாதிகளுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றும், மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லாது எனவும், மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் 1 முதல் 3 பிரதிவாதிகள் தாவா சொத்தில் வாதிகளின் அனுபவத்திற்கு இடையூறு செய்து வருவதாகவும் கூறப்பட்டுள்ள சங்கதியானது, வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.9 செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் 2,3 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட பட்டா மாறுதல் உத்தரவின்மூலம் அறிய முடிகிறது.

**9.** வாதிகள்தரப்பில், தாவா சொத்தானது ஆதியில் முத்துப்பேச்சி என்பவருக்கு பாத்தியப்பட்டு, அவர் மேற்படி சொத்தை தனது மகனான செல்லப்பனுக்கு உயில் சாசனம் எழுதி வைத்துள்ளார் என்பது குறித்தும், மேற்படி உயிலின் அடிப்படையில் மேற்படி செல்லப்பன் இறந்தபின்பு தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டு வாதிகள் தாவா சொத்தை அனுபவம் செய்து வருவது குறித்தும், தாவா சொத்தைப் பொறுத்து 1 முதல் 3 பிரதிவாதிகள் வில்லங்கம் ஏற்படுத்தியுள்ளது குறித்தும் சாட்சியமளித்து அதற்குரிய ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1 முதல் 3 பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாத நிலையில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என தெரிய வருகிறது.

**10.** எனவே, வாதிகள் தங்களது தரப்பு வழக்கை வா.சா.1ன் சாட்சியம் மூலமும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் நிரூபித்துள்ள நிலையிலும் 1 முதல் 3 பிரதிவாதிகள் வாதியின் வழக்கை மறுத்து இந்நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல்

செய்யாத நிலையிலும், வாதிகளின் வழக்கு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே வாதிகளின் பிராது, வா.சா.1ன் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்களை கருத்திற்கொண்டு வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**11.** இறுதியாக, இந்த வழக்கு அனுமதிக்கப்பட்டு,

(I) தாவாச் சொத்து வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக தாவா சொத்தை வாதிகள் அமைதியாக அனுபவம் செய்து வருவதற்கு 1 முதல் 3 பிரதிவாதிகளோ அவர்வகை ஆட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும்

(ii) 1ம் பிரதிவாதி தனது மக்களான 2, 3 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தைப் பொறுத்து எழுதி கொடுத்துள்ள 06.08.2013 தேதியிட்ட காரியாபட்டி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.3731/2013 தான செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதில்லை என விளம்புகை செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 30ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

SATHISH Digitally signed by SATHISH

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>வாதிகள் தரப்பு சாட்சிகள் :</u>

வா.சா.1 – செல்வக்குமார் (3ம் வாதி)

<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u>

| | |
|---|---|
| வா.சா.ஆ.1. 31.10.2014 | தாவா சொத்துக்கு முத்துப்பேச்சி பெயரில் உள்ள 434 நிர் பட்டா கணினி நகல் |
| வா.சா.ஆ.2. 06.01.1986 | முத்துப்பேச்சி எழுதி வைத்த உயில் சாசனம் அசல் |
| வா.சா.ஆ.3. --- | முத்துப்பேச்சியின் இறப்புச்சான்றிதழின் நகல் |
| வா.சா.ஆ.4. --- | தாவா சொத்துக்கு முத்துப்பேச்சி பெயரில் செலுத்திய வரி ரசீதுகள் எண்ணம் 2 |
| வா.சா.ஆ.5. --- | தாவா சொத்துக்கு 1ம் வாதி பெயரில் செலுத்திய வரி ரசீதுகள் எண்ணம் 2 |
| வா.சா.ஆ.6. 01.07.2004 | செல்லப்பனின் இறப்புச்சான்றிதழின் நகல் |
| வா.சா.ஆ.7. 02.07.2004 | செல்லப்பனின் வாரிசுச்சான்றிதழ் |
| வா.சா.ஆ.8. 06.08.2013 | 2,3 பிரதிவாதிகளுக்கு 1ம் பிரதிவாதி எழுதி வைத்த இனாம் செட்டில்மெண்ட் நகல் |
| வா.சா.ஆ.9. 21.01.2014 | 2,3 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு நகல் |
| வா.சா.ஆ.10. 29.09.2014 | முத்துப்பேச்சி பெயரில் மீண்டும் ஏற்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு நகல் |
| வா.சா.ஆ.11. 18.11.2014 | 1ம் வாதி பெயரில் ஏற்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு |
| வா.சா.ஆ.12. --- | தாவா சொத்துக்குரிய அரசு மதிப்பீடு நகல் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :</u> இல்லை

<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u> இல்லை

SATHISH Digitally signed by SATHISH

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
அசல் வழக்கு எண்.292/2025
சீரான/வரைவு தீர்ப்புரை
நாள் : 30.03.2026